JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/14/2015 |
| | : | Prosecution P.W -4 |
| NAME | : | முத்துராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday 03.03.2026.

**முதல் விசாரணை –**

நான் தற்போது மத்திய நுண்ணறிவு பிரிவு CID ஆக தென்காசி மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் நான் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது, கடந்த 09.04.2013 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது அந்தோணிவியாகப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்தார். மேற்படி நபரிடம் புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப சேர்ந்தமரம் காவல் நிலையக் குற்ற எண்.101/2013, இதச பிரிவுகள் 295 ஆக வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து கணம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அந்தோணி வியாகப்பன் அந்த சமயத்தில் பாஸ்டராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். புகார் மனுவில் புனித மாதா சிலை உடைக்கப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் இருவரிடம் கேட்கப்பட்டது என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், எந்த நபர் என சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். குற்ற எண்.283/2013 என்ற வழக்கில் அந்தோணி வியாகப்பன் உட்பட 30 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, வழக்கு முடிந்துவிட்டது என்றால் முடிந்துவிட்டதா என்று தெரியாது. குற்ற எண்.284/2013 என்ற வழக்கில் பாண்டித்துரை உட்பட 30 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, வழக்கு முடிந்துவிட்டது என்றால் முடிந்துவிட்டதா என்று தெரியாது. இரு தரப்பிலும் மத கலவரம் இருந்தது எனக்கு தெரியும். மேற்படி இரு தரப்பிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதும் எனக்கு தெரியும். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் புகாரைப்பெற்று இந்த எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2013 காலக்கட்டத்தில் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பிரச்சனை இருந்ததை கருத்தில் கொண்டு எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள், சொன்ன தேதியில் அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக தொடர்ச்சியாக குற்ற எண்.100/2013 மற்றும் குற்ற எண்.101/2013 ஆகிய இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi